சுடர்

வைகாசி இதழ் இப்போது
எங்கும் விற்பனையாகிறது
விலை ரூபா 1—00.

சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 வைகாசி—24, ஐ. ஆகிர்—7 (6-6-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 13

# "சிறைத் தண்டனையா? சொத்து பறிமுதலா?

# தமிழினத்தின் விடுதலைக்காக

# எந்தத் தியாகத்துக்கும் தயார்!"

## வெள்ளம்போல் தமிழர் கூட்டத்திடையே நாவலர் அமிர்தலிங்கம் வீரவுரை!

"தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த எங்கள் ஒவ்வொருவர் மீதும் ஐந்து குற்றச்சாட்டுக்களின் மீது மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை நடக்கவிருப்பதாக வெளியே வந்த பின்னர்தான் அறிந்தோம். தமிழ் சமுதாயத்தின் சுதந்திரத்துக்காக நாம் நடத்திவரும் இந்த இயக்கத்தில் எதுவரினும் ஏற்க நாம் தயாராக இருக்கிறோம். எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தாலும்சரி—எங்கள் சொத்துக்களைப் பறி முதல் செய்தாலும்சரி—இவற்றுக்கெல்லாம் தயார் என்ற நிலையிலேதான் சட்டமறுப்பில் ஈடுபட்டோம்; தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காக எங்கள் உயிர் போனாலும் சரி— இலட்சியத்தை விட்டு இம்மியும் விலகமாட்டோம்!"

—இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை (1-6-76) பிற்பகல் 2-30மணிக்கு யாழ் ரயில் நிலையத்தில் அலைகடலெனத்திரண்டிருந்த மக்கள் வெள்ளத்திடையே உணர்ச்சிபொங்க உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர்ளர் நாயகமும், தமிழரசுக்கட்சித் தலைவருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டு அரசியல் பிரகடனத்தை அச்சிட்டு விநியோகித்தல் மூலம் அவசரகாலச் சட்டவிதிகளை மீறியதாக மே 22ம் நாள் யாழ் நகரில் கைது செய்யப்பட்டு, மே 31ம் நாள் வரை கொழும்பில் சி. ஐ. டி. முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம் பா. உ., க. துரைரத்தினம் பா. உ. பண்டிதர் இரத்தினம் பா. உ. ஆகியோர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் யூன் முதலாம் திகதி காலை யாழ்தேவி புகைவண்டி மூலம் யாழ்ப்பாணம் சென்றனர்.

விடுதலையாகி, தாயகம் திரும்பும் தங்கள் இதயம் நிறைந்த தலைவர்களை வரவேற்க அன்பும், ஆர்வமும், உணர்ச்சியுங் கரைபுரண்டோடும் உள்ளத்தினராய், தமிழ் சமுகத்தின் எல்லைப் பிரதேசமான வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை ஒவ்வொரு புகையிரத நிலையத்திலும், மாலையும் மலர்

—5-ம் பக்கம் பார்க்க








தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமும், கூட்டணியின் ஏனைய மூன்று பா உக்களும் கடந்த மே 22ம் நாள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பதட்ட நிலைமை குறித்து இந்திய ஆங்கில ஏடுகள் முன்பக்க தலைப்புச் செய்திகள் வெளியிட்டிருந்தன. ஆனால் அந்தச் செய்திகளைத் தாங்கி வந்த ஏடுகளை சுங்கப்பிரிவினர் நாட்டுக்குள் நுழைய விடாது. தடுத்து விட்டனர். தடுக்கப்பட்ட பத்திரிகையிலொன்றான இந்தியன் எக்ஸ்பிரஸ் 25-5-76 இதழில் இலங்கைப் பிரச்சினை பற்றி வெளியிட்டிருந்த 'போட்டோஸ்ராட்' படத்தை மேலே தந்திருக்கிறோம். தமிழ் பிரதேசத்தில் தயார் நிலையில் இராணுவம் வைக்கப்பட்டிருப்பதாக தலையங்கம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கும் இச்செய்தியில், தலைவர்கள் கைது செய்யப்பட்டபின்னர் தமிழ்ப் பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலை, 48 மணி நேரத்தின் பின்னரே கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

# திமுக தலைவர் கருணாநிதியும் கைதாகி விடுதலை!



தமிழக முன்னாள் முதல்வரும் திமு கழகத்தின் தலைவருமான டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி சென்னையில் யூன் 1ம் நாள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பல மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டார். துண்டுப் பிரசுரங்களை அவர் விநியோகித்தபோதே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு பல மணிநேரம் காவலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுமா என்பது தெரியவில்லை. யூன் 3ம் நாள் கலைஞர் கருணாநிதியின் 52வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திமுகழகத்தினர் சென்னையில் நடத்தவிருந்த ஊர்வலத்தையும் பொலிசார் தடைசெய்தனர்.

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இற்றைக்கு 20 ஆண்டுகளுக்குமுன்— 1956 யூன் ஐந்தாம் நாள் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தின் எதிரே தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகம் வரலாற்றுப் பெருமைமிக்கது; தமிழ் விடுதலைப் போராட்டத்தின் தொடக்கம் இந்தச் சத்தியாக்கிரகமே. அன்று நடந்த இந்தப் போராட்டத்தைப் பற்றி தமிழரசுக்கட்சியின் ஆரம்பகாலத் தொண்டரும், யூன் ஐந்து சத்தியாக்கிரகம் உட்பட, கட்சி நடத்திய அறப் போராட்டங்கள் அனைத்திலும் பங்குபற்றியவரும்—சிங்களச் சிறீ எதிர்ப்பு போரில் சிறை சென்றவரும், தமிழினம் ஏன் தாழ்ந்தது என்ற நூலை எழுதியவருமான அளவெட்டியைச்சேர்ந்த சிறீ முருகன் அவர்கள் இக்கால இளைஞர்களுக்கு எடுத்துக்கூறுமுகமாக இங்கு எழுதுகிறார்...**

# இரத்தம் பொங்கிய ஜூன் ஐந்து!

**1956ம் ஆண்டு யூன் ஐந்தாம் நாள் தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் கொழும்புமாநகரில் நடாத்திய அறப் போராட்ட வரலாற்றை இன்றைய இளம் சந்ததியினர் அறிய வேண்டுமென்ற ஆவலோடு எழுதுகின்றேன்.**

1956ம் ஆண்டு பண்டாரநாயக்காவை பிரதமராகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சி நடந்தது, அவருடைய ஆட்சியில் தான் தனிச் சிங்களச் சட்டம் 1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டது.

தனிச் சிங்கள மசோதாவை பாராளுமன்றத்தின் உள்ளும், புறமும் தமிழ் பேசும் மக்கள் எதிர்க்க வேண்டுமென தமிழரசுக் கட்சிசெயற்குழுவினர் முடிவு செய்தனர். பாராளுமன்ற வாசலில் தமிழ்பேசும மக்கள் அறப்போர் நடத்தி உலகத்திற்குத் தெரியப் படுத்தவேண்டுமெனவும் தீர்மானித்தனர், மேற்படி தீர்மானங்களின்படி, தமிழகம் பூராவும், கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் தலைமையில் பட்டிதொட்டிகள்தோறும் பிரசாரக் கூட்டங்கள் நடந்தன.

## ● பயில்வான் இரத்தினம் உண்ணாவிரதம்

தமிழ் மொழியை அரசு கட்டில் ஏற்ற வேண்டும் என்ற பெருநோக்குடன் மயிலிட்டியைச் சேர்ந்த அமரர் பயில்வான் இரத்தினம் அவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார், உணவுக்கும் உடைக்கும் அஞ்சி வாழ்பவர் தமிழர் அல்லவென்றும், இன்னுயிர் ஈந்தும் இளங்கோ வளர்த்த இன்பத் தமிழ் மொழியின் இன்னல் துடைப்பேன் என திடசங்கற்பம பூண்டார், 21 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார். அக்கிரமம் படைத்த ஆட்சிபீடம் திரும்பியும் பார்க்கவில்லை. பயில்வான் இரத்தினம் யாழ்நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தமிழ் மக்கள் திரள்திரளாகச் சென்று பார்வையிட்டு அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

யாழ்நகர், பெருமாள் கோவிலடி அமெரிக்கன் மிசன் பாடசாலை முதல் ஆசிரியர் திரு. தியாகராசா தலைமையில் வித்துவான் வ. கந்தையா, ஸ்ரீமுருகன் ஆகிய இருவரும் இணைச்செயலாளர்களாகவும், புதுமைலோலன் தனாதிகாரியாகவும் கொண்ட தமிழ் மொழிப் பாதுகாப்புச் சபை அந்நாட்களில் இயங்கிக்கொண்டிருந்தது. பயில்வான் இரத்தினம் அவர்களுக்கு அனுதாபக் கூட்டம் நடாத்த வேண்டுமெனவும், பொற்கிழி வழங்க வேண்டுமெனவும், தமிழ்மொழிப் பாதுகாப்புச் சபையினர் தீர்மானித்தனர்.

## ● வன்னியர் முழக்கம்

1956ம் ஆண்டு ஆனி மாதம் மூன்றும் நாள், டாக்டர் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் அனுதாபக்கூட்டம் யாழ் முற்றவெளி மைனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, அமரர் வன்னியசிங்கம் யூன் ஐந்தாம் நாள் அறப்போர் பற்றிய விபரங்களை, ஆணித்தரமாக வரையறுத்துப் பேசினார். அறப்போரில் பங்கு கொள்ள விரும்புவோர், ஒரு பக்கமாக வரும்படி அழைக்கிறார். வித்துவான் வ. கந்தையா, கொக்குவில் அருணாசலம், ஸ்ரீமுருகன், நாச்சிமார் கோவிலடி சிதம்பரேஸ்வரன், சிவரத்தினம் ஆசிரியர், தியாகராசா, ஆசிரியர் சச்சிதானந்தம் ஆசிரியர் நண்பன் அரசரத்தினம் ஆசிரியர், மல்லாகம் சட்டத்தரணி நடராசா. முதல் வரிசையில் நிற்கிறார்கள், எங்களைத் தொடர்ந்து இன்னும் பலர்.

செந்தமிழ் வீரர்களே, சென்று வாருங்கள், வென்று வாருங்கள் பரணிபுகழ் பாடுவோமென. வித்துவான் வேந்தனார் ஆசியுரைகூற தமிழ போராட்ட வீரர்கள் புகையிரத நிலையம் நோக்கிப் புறப்பட்டனர்.

வன்னியனார் தலைமையில் சகலரும் புகையிரதத்தில் ஏறிவிட்டோம், வீரர்களை சுமந்துசெல்லும் புகையிரதமும் கெம்பீரமாக ஓடுகிறது, ஒவ்வொர் புகையிரத நிலையத்திலும் தொண்டர்படையினர் ஏறுகிறார்கள். புகையிரதம் கொழும்பு மாநகரை அடைந்தது, சத்தியத்தின் சொரூபம், தந்தைசெல்வநாயகம் உட்பட, இரும்பு மனிதன் நாகநாதன், கடமை வீரர் நவரத்தினம், இன்னும் பலர், எங்களை இன்முகம் காட்டி வரவேற்கிறார்கள். யாவரும் பம்பலப்பிட்டி கதிரேசன் கோவில் ஆலய மடத்தில் தங்கினோம். பயிற்சி கொடுக்கப்பட்டது.

## ● சுலோக அட்டைகளுடன்

மட்டக்களப்புதொண்டர்களையும், திருமலைத் தொண்டர்களையும் வரவேற்று அழைத்து வர வட்டுக்கோட்டை உ. அண்ணன் அமிர் அவர்களும் வேறு சிலரும் கோட்டைப் புகையிரத நிலையத்துக்குச்சென்றுவிட்டார்கள். நாங்கள் அனைவரும் 5ந் திகதிகாலை வாகனங்களில் ஏறுகின்றோம். பாராளுமன்றம் நோக்கி வாகனங்கள் பறக்கின்றன. கோல்பேஸ் மைதானத்தில், தந்தை செல்வா, வான் புகழ் கொண்ட வன்னியர் தலைமையில் பாராளுமன்றம் நோக்கிச்செல்கின்றோம். வெலிமடை எம். பி. ராஜரத்தின தலைமையில் ஒரு பெருங்கூட்டம் எங்களை தாண்டிச்செல்கின்றது நாங்களும் — நிராயுத பாணிகளாக, 'எமது மொழி எமக்குவேண்டும்,' 'செந்தமிழை விற்கமாட்டோம், தமிழும் அரசகருமமொழியாக வேண்டும், 'தமிழ் மொழி வாழ்க' 'இணைப்பு ஆட்சிவேண்டும், என்னும் சுலோகங்கள் அடங்கிய அட்டைகளை கழுத்தில் தாங்கிய வண்ணமும், கையில் பிடித்த வண்ணமும் ராசரத்தினுவின் படையை முன்நோக்கிச்செல்கின்றோம்.

## ● காடையர் கும்பல் சூழ்ந்தது

பாராளுமன்றத்தை சுற்றி முள்ளுக்கம்பி வேலிகள் போடப்பட்டன. நூற்றுக்கணக்கான பொலிஸ்காரர்கள் அங்கே நிற்கிறார்கள். குதிரையில் திரிவோர் ஒரு புறம், வாகனங்களில்வந்து சிங்களக்குண்டர்கள் காடையர்கள் ஏராளமாக இறங்குகிறார்கள். பிரதமர் பண்டாரநாயக்கா பாராளுமன்றமேல் மாடியில் நிற்கிறார்; வேறு சில அமைச்சர்களும் நிற்கிறார்கள். சிங்களக் காடையர் கும்பல் கிட்டத்தட்ட இருபதினாயிரத்துக்குமேற்பட்டுவிட்டது.

வவுனியா எம். பியும், அடங்காப்பற்றுத் தலைவனுமான சுந்தரலிங்கம் அவர்கள் வருகிறார். அவரை அடுத்து ஜீ. ஜீ. வருகினார். இருவரும் எமது தலைவர்களுடன் கதைக்கிறார்கள். என்ன கதைத்தார்களோ தெரியாது. ஜீ. ஜீ. சென்றுவிட்டார். சுந்தரர் எம்முடன் நிற்கிறார். நாங்கள் பாராளுமன்றத்தை நோக்கிச்செல்கின்றோம். பொலிஸ் அதிபர்கள் எம்மை நிற்பாட்டுகிறார்கள். நாங்கள் முதல் நாளே தீர்மானித்தபடி உட்கார்ந்துவிட்டோம். தந்தை செல்வா முன் இருக்கின்றார். அடுத்த படியாக கோப்பாய் கோமசனும், ஸ்ரீமுருகனும் இருக்கிறார்கள். ஸ்ரீமுருகனுக்குப் பக்கத்தில் அவ [illegible] மகேந்திரன் அமருகிறார். எல்லோரும் அமர்ந்துவிட்டோம்.

## ● தாக்கினார்கள்

சிங்களக் காடையர்கள் எங்களை நோக்கி வருகிறார்கள். கையால் அடித்தார்கள், காலால் உதைத்தார்கள். கற்களால் எறிந்தார்கள். மல்லாகத்தைசேர்ந்த சட்டத்தரணி நடராசா அவர்களின் மூக்குக் கண்ணாடியை பறித்தார்கள். கைக் கடிகாரத்தை பிடுங்கினார்கள். உதைத்தார்கள். உமிழ்ந்து துப்பினார்கள். பல தொண்டர்கள் திசைகெட்டு ஓடினார்கள். கொக்குவிலை சேர்ந்த அப்பையா சுவாமி தலையில் சிறுநீரைப்பெய்தார்கள். உடுப்பிட்டியை சேர்ந்தநண்பன் செல்லையாவின் ஒரு காதை கடித்தெடுத்தார்கள். சிலதொண்டர்களின் வேட்டி, சேட்டுகளை களைந்து எடுத்தார்கள். சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர், கடமை வீரன் நவரத்தினத்தை மூங்கில் தடியால் தாக்கினார்கள், வயிற்றிலே மூங்கிலால் குத்தினார்கள். தெல்லிப்பளையை சேர்ந்த சட்டத்தரணி சிதம்பரநாதனுக்கு கண்ணை தாக்கி அடித்தார்கள்; கண்ணேகெட்டுவிடும்போல் இருந்தது.

வெலிமடை எம். பி ஆள் அடையாளம் காட்டுகிறார். வன்னியசிங்கத்தின் அருகே வருகிறார்கள் அடி விழுகின்றது அடிக்குமேல் அடி, மேல் அங்கி (நாஷனல்)யைக் கிழித்தார்கள், பெனியனைக் கிழித்தார்கள், தலைமயிரில் பிடித்து இழுத்தார்கள். விழுந்துவிட்டார், காலால் உதைக்கிறார்கள், மூங்கில் தடியால் அடிக்கிறார்கள், இரத்தம் பீறிட்டுப்பாய்கிறது. நாலாபக்கமும் ஒரே அடி, எறி, உதை, வாய்ப் பேச்சுக்களோ தாங்க முடியவில்லை—அதை எப்படி எழுதுவது? எப்படி வர்ணிப்பது, அவற்றை எழுதி உங்கள் சிந்தனையை தூண்ட விரும்பவில்லை.

அமளி துமளியின் மத்தியிலே, காடையரின் கொடுங்கோன்மையின் சூழலிலே, தந்தை செல்வாவின மகன், மனோகரன் தங்கள் சொந்தக் காரில் வந்து இறங்குகிறார். தந்தையின் முன்னால் வருகிறார். அடி அல்ல' பொக்சிங் நடக்கிறது தந்தையின் முன்னிலையில் மைந்தன் தாக்கப்படுகிறார், தந்தை மௌன விரதத்தைக் கைவிடவில்லை. உதை நடக்கிறது, அறிவு கெட்ட நிலை—

## ● அடி, உதை

இவ் வண்ணமிருக்கையில் என்பக்கம் வருகிறார்கள். நடக்கிறது பூசை எனக்கு. எனக்கு அன்று திடகாத்திரமான உடம்பு, சுருங்கச் சொல்லில் இரும்புத்தேகம். அறிவு இழந்து விட்டேன். அறிவு இழந்த பின்னரும் உருட்டி உருட்டி அடித்தார்கள், எனக்கு என்னவோ ஒன்றும் தெரியவில்லை. "பஞ்சபூதங்களும் அற்று, உரை அற்று, உணர்வு அற்று, உடல் அற்று, உயிர் அற்ற, உபாயம் அற்று கரை அற்று, எனது அற்று" என்று அருணகிரி நாதன் கூறும் வகையாகி விட்டேன், கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் இருக்கும் என நினைக்கின்றேன், கண்ணை சற்று விழிக்கிறேன், மாவிட்டபுரத்தை சேர்ந்த பண்டிதர் சச்சிதானந்தம் பீ. ஏ. தனது சால்வையால் என்னை விசுக்கிக் கொண்டு நிற்கிறார், எம்படை வரினும் அஞ்சேன் என்று கூறிய பண்டார வன்னியனின் வம்சத்தை சேர்ந்த ஒருவர் கடல் தண்ணீர் அள்ளி வந்து தெளிக்கிறார். உணர்வு வந்து விட்டது. ஒருவாறு எழும்புகிறேன், சேட்டை காணவில்லை, நாலாபக்கமும் பார்க்கின்றேன், பசும் புல் தரை, பைந் தமிழர் செங்குருதியால், செக்கச் செவேல் என தெரிகிறது; மீண்டும் முன்னிருந்த இடம் சென்று அமர்ந்துவிட்டேன்.

களைப்புடன் வந்த பச்சிளம் குழந்தையை தாலாட்டுவது போல் இனிமையான குரல் காதில் விழுகிறது—சற்றுத் சை திரும்பிப் பார்க்கின்றேன்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே," என்ற பாரதியின் பாட்டும், "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற தேவாரத்தையும், தமக்கே உரிய பண்பில் படிக்கிறார். வயாவிளானைச் சேர்ந்த சட்டத்தரணி இராமலிங்கம் — காடையர் அவரையும் சும்மா விடவில்லை பதம்பார்க்கிறார்கள்;

இந்தவேளையில் தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா, என்ற வீரகர்ச்சனை வானைப்பிளக்க, 200க்கு மேற்பட்ட கூட்டம், அண்ணா அமிர்தலிங்கம், இராசதுரை மாணிக்கவாசகர், இராசமாணிக்கம் இன்னும் பல தலைவர்கள் முன் வர விரைந்து வருகிறார்கள். சிங்களக் காடையர் கூட்டம், அவர்கள் ஆயுத வீரர்களாக, மறப்போருக்கு வருகிறார் என்றுபயந்துபோலும் இடம்விட்டு விலகி, ஓரங்களில் ஒதுங்குகிறார்கள். சேரன் படையும், சோழன் படையும், பாண்டியர் படையுடன் சேர்ந்து அமர்ந்துவிட்டார்கள். இந்தப் பரிதாபக் காட்சியை, தமிழ்மக்களுக்கு நியாயம் வழங்குவேன் எனக் கூறும் அனுரா

---

**ஸ்ரீமுருகன்**

---

பண்டார நாயக்காவின் தந்தை பிரதமர் பண்டார நாயக்கா, பாராளுமன்ற மேல் மாடியில் நின்று பார்வையிடுகிறார், என்னே இந்நாட்டின் பிரதமரின் பண்பு, என்னே இந்நாட்டின் பிரதமரின் நீதி.

சிங்களக் காடையரின் மத்தியிலே, மாம்பழ வியாபாரம் நடக்கிறது, மாம் பழத்தைகள், புசிக்கிறார் கொட்டையால் எங்களுக்கு எறிகிறார்கள்.

## ● தனிநாயக அடிகள் வந்தார்

இந்தவேளையில் வெள்ளை வெளேரென்ற உருவம் ஒன்று கண்ணுக்கெட்டும் தொலைவிலே வருகின்றது. கிட்டவந்தவிட்டது அந்த உருவம், அவர்தான் சுவாமி

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக வீரன் சிவகுமாரன்!

சிங்கத்தமிழன் சிவகுமாரன் நினைவு நாள் 5-6-76. சிவகுமாரன் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து பின் தனது இள வயதில் தானே களம் ஆடி முடிந்த உரும்பிராய் மண்ணில் வீர மரணம் அடைந்த தம் தலைவனுக்கு சிலை நிறுவியுள்ளார்கள் வீரத் தமிழ் இளைஞர்கள்.

உலக மாகவி சேக்ஸ்பியரின் கூற்றுப்படி சிலர் பிறக்கும் போதே தலைவர்களாகப் பிறக்கிறார்கள்; சிலர் தலைமையைத் தேடிச் சம்பாதிக்கிறார்கள்; இன்னும் சிலரிடம் அது திணிக்கப்படுகின்றது. சிவகுமாரன் பிறப்பால் ஒரு தலைவன்.

சாதிப் பாகுபாட்டை வெறுத்தவன் சிவகுமாரன். தான் பிறந்து வாழ்ந்த தனது சொந்தக் கிராமத்திலேயே அதனைச் சாகடிக்க முயன்றான் சிவகுமாரன். 1970ல் உரும்பிராயில் அவன் நடத்திய சமபந்தி போசனம் அதற்கு ஒரு சிறு உதாரணம். உரும்பிராய் அம்மன் கோவில் அருகில் சிறுபான்மைத் தமிழர் என அழைக்கப்படுபவர்களது வாசிகசாலையில், சம்பந்தப்பட்டவர்களால் தயாரிக்கப்பட்ட உணவை, அவர்களே பரிமாற சமமாக உடனமர்ந்து சம பந்தி போசனம் செய்வதாக அமைந்ததே அச் சம பந்தி போசனம்.

அச் சமபந்திக்கு உரும்பிராயில் இருந்தும் வெளியில் இருந்தும் கட்சிப் பற்றற்ற முறையில் எல்லா அரசியல் கட்சிப் பிரமுகர்களையும் கலந்துகொள்ளும்படி சிவகுமாரன அழைத்திருந்தான். சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த உயர்குடிப் பிறந்தோர் எவரும் அதில் கலந்து கொள்ளவில்லை. அதிலுள்ள முக்கியம் என்னவெனில் அந்த வாசிகசாலையின் முகாமை உத்தியோகத்தர்கள் இடதுசாரி இயக்கங்களின் வடமாகாணப் பிரமுகர்கள்; முக்கிய பதவி வகிப்பவர்கள். அவர்களுள் ஒருவர் வாலிப இயக்கத்தால் மாஸ்கோவுக்கே அனுப்பப்பட்டவர். எப்படி இருப்பினும் 1970ல் எதிர் வரவிருந்த பொதுத் தேர்தலில் கட்சி நலன் பாதிக்கப்படாதிருக்க வேண்டுமென்பதற்காகப் பயத்தால் அவர்கள் யாவரும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களோ கட்சியின் உள்ளூர் அனுதாபிகள், ஆதரவாளர் சகிதம் சமபந்தி போசனத்தில் கலந்து கொண்டார். சுதந்திரம் வேண்டுமென்றால் சாதி சாக வேண்டுமென்று கூறிய தமிழரசுக் கட்சி சாதி ஒழிய வேண்டுமென்பதற்காகத் தேர்தலில் தோல்வியைத் தழுவுவதற்கும் தயாராக இருந்தது. 1970 பொதுத் தேர்தலில் சிவகுமாரன் தமிழரசு வேட்பாளரை ஆதரிக்காமைக்கு மேற்படி சமபந்தி போசனமும் ஒரு காரணமே!

மேற்படி சமபந்தி போசனத்தால் ஒரு சிலர் மத்தியில் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சிதான், முன்னாள் உதவி அமைச்சர் காலஞ்சென்ற சோமவீர சந்திரசிறீ அவர்களது மோட்டாருக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் வைத்துக் கைக்குண்டு வீசியது சிவகுமாரனாகத்தான் இருக்கவேண்டுமென்று கோள்மூட்டப்படக் காரணமாக அமைந்தது என்பது உள்ளூர் மக்கள் அறிந்த உண்மை. சிறுபான்மைத் தமிழ் மக்களோ சிவகுமாரனைத் தம் சொந்தக் குழந்தையாகவே பேணிக் காத்தனர். சிவகுமாரனைப் பிடித்துத் தருவதற்கான இரயம் ரூபா 1000/— ஆக இருந்து ரூபா 5000/— ஆக அறிவிக்கப்பட்ட போதும் ஏற்பட்ட பலன் பூச்சியமே. இயேசு கிறீஸ்துவை யூதாசும், தந்தை செல்வாவை அரசியல் ரீதியாக மாட்டினும் காட்டிக் கொடுத்தார்கள். சிவகுமாரனை எந்தத் தமிழனும் காட்டிக்கொடுக்கவில்லை. உணர்ச்சிக் கவி காசி ஆனந்தன் கூறியது போன்று ஆட்டினை, மாட்டினைக், கோழியை வாங்குவது போன்று சிவகுமாரனைக் காட்டிக்கொடுக்க மானமுள்ள எந்தத் தமிழனையும் வாங்க முடியவில்லை தமிழ் மக்கள் யாவரும் மனிதர்களாக உயர்ந்து நின்றமையால்.


சாதியைச் சாகடிக்க இஸ்லாமிய நெறியில் சகோதரத்துவத்தைச் வலியுறுத்தினான் தியாகி சிவகுமாரன். அனுராதபுரம் சிறையில் உடன் சிறையிருந்த தமிழ் இளைஞர்களைக் கொண்டு இஸ்லாமியர் போன்று ஒரே கோப்பையில் மூன்று நான்கு பேராக உணவு உட்கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தினான். இதனால் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் மனதில் சாதிபற்றிய சிந்தனையே எழாதபடி பாதுகாத்தான்.

கூட்டுத் தலைமையை மேற்கொள்வதில் தமிழ் இளைஞர் பேரவை தமிழர் கூட்டணிக்கே முன்னோடியாக இருந்ததென்றால் அதற்கும் வழி சமைத்தவன் சிவகுமாரனே. தமிழ் இளைஞர் பேரவை சிறுபான்மைத் தமிழ் இளைஞன் தலைமையில் அவன் ஆணைக்குப் பணிந்து "செய் அல்லது செத்துமடி" என்ற கொள்கையை முன் வைத்துச் செயற்கரிய செயல்பல புரியப் புறப்பட்டதென்றால் — தமிழ் இளைஞர்களைத் தமிழ் வீரர்களாகப் பயிற்சிகளும் அனுப்பிய பெருமை தியாகி சிவகுமாரனுக்கே உரியதாகும்.

இத்தனை சாதனைகளையும் தனி ஒருவனாகச் சாதித்த சிவகுமாரன் தலைமைப் பதவியை விரும்பவில்லை, தன் கடன் பணி செய்து, தான் பிறந்த உரும்பிராய் மண்ணுக்குரிய பண்டைப் பெருமைக்கு ஏற்ப வீர மறவனாக வீர மரணம் அடைவதையே தெரிந்து கொண்டான். சந்தர்ப்பங்கள் பல அளிக்கப்பட்ட போதும் தான் மட்டும் தப்பித்துக்கொள்ள நாடுகடக்க அவன் தயாராக இருக்கவில்லை.

சிவகுமாரனுக்கு விழா வெடுப்பவர்கள் யாவரும் அவனது இலட்சியம் ஈடேறத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதற்கு முன் சாதி சாகடிக்கப்படவேண்டும். சாதி செத்தால்தான் தமிழனுக்குச் சுதந்திரம் பிறக்கும். அதுவே சிவகுமாரன் தன் இளவல்களுக்குக் காட்டிய பாதை அவன் அடியொற்றி அவனைப் பின்பற்ற விரும்புவோர் அதற்குத் தம்மைத் தகுதியாக்க முதற்கண் செய்யவேண்டிய பணி சாதியைச் சாகடிப்பதுதான் சிவகுமாரன் வரலாறு. வரலாற்றில் பொன்னெழுத்தால் பதியப்படும். சிவகுமாரன் நினைவைப்போற்றுவோம்.

—உரும்பிராய் ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மின்மினி கொள்வோமோ?

இந்த நாட்டில் தமிழ் மக்கள் ஒவ்வொரு தடவையும் பொறுமையிழந்து நேரடி நடவடிக்கையிலிறங்கி — போராட்டம் நடத்தி—தமிழ் தலைவர்கள் கைதுசெய்யப்படும் நிலைமை தோன்றும் போதுதான் சிலருக்கு தமிழர்கள் என்றோர் இனத்தவர் இங்கு வாழ்வதும், அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாமலிருக்கின்றன என்பதும் நினைவுக்கு வருவது வழக்கம்!

இத்தகைய நேரத்தில் தமிழ் மக்களின் உணர்ச்சித் திவை சாந்தப்படுத்தும் நோக்குடன் அறிக்கைகள் அடுத்து அடுத்து வரும்; பேச்சுவார்த்தை, சமரசம், சகிப்புத்தன்மை, உடன்படிக்கை, நல்லெண்ணம், போன்ற இத்தியாதி சொற்கள் அந்த அறிக்கைகளில் தாராளமாக இடம்பெறும்; சற்றுச் சூடு தணிந்ததும்—பிரச்சினை தீர்க்கப்பட்டதோ இல்லையோ இந்த அக்கப்போர் அறிக்கை வீரர்கள் பின்னர் இருந்த இடம் தெரியாமல் எங்கேயோ மறைந்து விடுவார்கள்!

நசுக்கப்படும் தமிழினம் தொடர்ந்து நசுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்!

இது கடந்த இருபதாண்டு கால வரலாற்றில் நாம் கண்ட நிதர்சனமான உண்மை!

இப்போதும் இதே மாமூலான அறிக்கைகளே சில நாட்களாக பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருப்பதை அன்றாடம் காண்கிறோம்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர்நாயகம் அமிர்தலிங்கம் அவர்களும் கூட்டணி பா. உ.க்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டதையடுத்து தமிழ் மக்கள் மத்தியிலே தோன்றிய கொந்தளிப்பான சூழ்நிலைக்கு முன்னர் தாக்குப் பிடிக்கமுடியாமல், சமரசம், சமாதானம், சௌஜன்யம் பேச்சு வார்த்தை, உடன்படிக்கை போன்ற சொற்களைப்பெய்துயார்யாரோவெல்லாம் அறிக்கைவிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தைப் பற்றிச் சிந்திக்காதவர்கள் — தமிழ் மக்களுக்கு பிரச்சினையே கிடையாது என்றவர்கள்—தமிழரசுக்கட்சியினரே நாட்டை குழப்புகின்றனர் என்று குற்றஞ் சுமத்தியவர்கள் எல்லாம்—இன்று தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென்று வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்!

பிரச்சினையை பிரச்சினையாக,தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கடந்த கால்நூற்றுண்டுகாலமாக வைத்துக்கொண்டிருப்பதால்தான் இன்று மற்றவர்கள் தமிழினத்தைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பு ஆவது கிடைத்திருக்கிறது. இல்லாவிட்டால் தமிழினமே இன்று வேரோடும் வேரடி மண்ணோடும் இந்நாட்டில் அழிக்கப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கும்!

பிரதமர் திருமதி பண்டாரநாயகா கூட, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வெள்ளிவிழாவில் பேசும்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளாலும், உடன்படிக்கையாலும் தமிழர் பிரச்சினைக்கு சமரசத்தீர்வு காணமுடியும் என்று கூறியிருப்பதாக ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதமரின் பேச்சு, பக்தா இது என்ன பூலோகமா? என்று கேட்பதுபோல அமைந்திருக்கிறது!

சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கும்,சமரச உடன்படிக்கைக்கும் யார் முரணாக நின்றார்கள்! யார் செய்து கொண்ட ஒப்பந்தங்களையே கிழித்து வீசினார்கள் என்கிற வரலாறுகள் அதற்குள் மறந்தாபோய்விட்டன?

1957ம் ஆண்டு எழுத்து மூலமாக செய்யப்பட்ட பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு என்ன கதியேற்பட்டது? 1960 ஜூலைப்பொதுத்தேர்தலின் முன்னர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தமிழரசுக் கட்சிக்கு அளித்த வாய்ப்பேச்சு வாக்குறுதிகளுக்கு என்ன நிகழ்ந்தது? 1965ம் ஆண்டு ஏற்பட்ட டட்லி—செல்வா ஒப்பந்தத்துக்கு நடந்தது என்ன? தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு காணமுற்பட்ட ஒவ்வொரு சமயத்திலும்—சிங்கள மக்கள் அதற்கு எதிராகபொங்கியெழுந்து அவற்றை ஆதிக்க வெறியோடு முறித்துக் கொட்டி வருவதை மேற்கண்ட ஒப்பந்தங்களுக்கேற்பட்ட கதி எடுத்துக்காட்டவில்லையா?

இன்று சமாதானம், சமரசம் என்று பேசும் பிரதமர் அன்று அரசியல் நிர்ணய சபையிலேயே தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, தமிழர் உரிமைகளை அரசியல அமைப்பில் அன்றே சேர்க்கிருக்கலாமே! —அப்படிச் செய்திருந்தால், இன்று இவ்வளவு தூரம் பிரச்சினை சிக்கலடைந்திருக்காதே!

தமிழ் மக்களின் தலைவர்கள், அன்று அரசியல் நிர்ணய சபையில் தமிழினத்தின் கோரிக்கைகளை முன்வைத்தார்கள்: இக்கோரிக்கைகள் மீது சமரசம் காணவும் தயாராக இருப்பதாக அறிவித்தார்கள்; பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் அரசியல் நிர்ணய சபைக்கு வெளியே தனிப்பட்டமுறையிலும் சந்தித்து தமிழர் கோரிக்கைகளை சமாதானமாக வென்றெடுக்கப்பேச்சு வார்த்தை நடத்திப் பார்த்தார்கள்; எதுவும் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் இறுதியாக அரசியலமைப்பு உருவான பின்னர் கூட — 1972ம் ஆண்டு ஆறு அம்சக் கோரிக்கையொன்றை அனுப்பி அதுபற்றிப்பேசத் தயார் என்றும் எழுதினார்கள்.

இவற்றுக்கெல்லாம் எதுவித பதிலுமின்றி—ஆதிக்கத் திமிருடன், அகம்பாவத்துடன். ஆணவத்துடன் இருந்த ஆட்சியின் தலைவிதான், பேச்சுவார்த்தை, சமரசம் உடன்படிக்கையென்று இன்று கனவுலகிலிருந்து விழித்தவர்போலப்பேசுகிறார்.

பொறுமை பொறுமையென்று பொறுத்துக் கிடந்த தமிழினம், இன்று புதிய குறிக்கோளை ஏற்றுக்கொண்டு —தனது தலைவிதியை தானே எழுதுவது என்று முடிவு செய்துவிட்டது. சமரசம், உடன்பாடு, நல்லெண்ணம் என்ற வார்த்தைகள் எல்லாம் இன்று தமிழ் மக்களின் அகராதியிலிருந்து அகற்றப்பட்டு விட்டன, யாரையும் மேலும் மேலும் நம்பிக்கெட ஈழத்தமிழன் இனியும் ஆயத்தமாக இல்லை!

உச்சிமாநாடு முடியும்வரைதான் உடன்படிக்கைக்கதையிருக்கும்—அதன்பின்னர் உதை விழும் என்பது தமிழனுக்குத்தெரியும்! எனவே கறந்த பால் முலைக்கேறுவதுபோல — தன்னுடைய சிந்தனையை வேறு திசைகளில் திருப்பி—விடுதலையை மேலும் பத்தாண்டு காலத்திற்கு தள்ளிப்போட்டு—அழிந்துபோவதற்கு தமிழன் தயாராக இல்லை!

உலகம் தன்மீது சுமத்தும் குற்றச்சாட்டிலிருந்து அரசு தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பினால்—தமிழினத்திற்கு தன்னிஷ்டப்படி அளிக்கவிரும்பும் சலுகைகளை தாராளமாக அளிக்கட்டும்! அதற்கு நாம் குறுக்கே நிற்க மாட்டோம்! ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியோ—தமிழ்பேசும் மக்களோ—விண்ணிலிரவியை நாடி விடுதலைப்பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் மின் மினியைக் கையில் பிடித்துப் பார்க்கமாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்!

# தேவநாயகத்தின் ஒப்பாரி!

## கூட்டணியிலிருந்து அவர் ஒதுங்கினரா? அல்லது கூட்டணி அவரை ஒதுக்கியதா?

### இரட்டை வாழ்க்கைக்கு கூட்டணியில் இடமில்லை!

தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேராதவர்களுக்கும் அதன் இலட்சியப் பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் தமிழ் ஈழத்து அரசியலில் எதிர்காலத்தில் கிஞ்சித்தும் இடமில்லையென்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. அதுவும் வட்டுக்கோட்டை மாநாட்டில் கூட்டணி முன் வைத்துள்ள அரசியல் பிரகடனத்தின் பின்னர் இந்த நிலை உறுதிப்பட்டுவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே தமிழினத்தின் ஏக இயக்கம்; இணைந்த இயக்கம்; இலட்சியப் பாசறை; தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்துள்ள குறிக்கோள் ஒன்றின் மூலமாக மட்டுமே தமிழ் சமுதாயம் விடுதலை பெற்ற இனமாக— தன்னைத்தானே ஆளும் இனமாக தலையெடுக்க முடியும் என்கிற கருத்து தமிழன் ஒவ்வொருவனது நெஞ்சிலும் ஆழப்பதிந்துவிட்டது.

இந்த உண்மையை சரியாகப் புரிந்துகொண்டதனால் தான், தமிழினத்துக்கு அள்ளி வைத்த ஐக்கிய தேசியக்கட்சியை விட்டு வர மனமின்றி இன்னும் அதிலேயே தொற்றிக் கொண்டிருக்கும் கல்குடா பா. உ. திரு. தேவநாயகம், அண்மையில் அரற்றியிருக்கிறார்; ஒப்பாரி வைத்திருக்கிறார்!

"தமிழர் கூட்டணியின் தோற்றத்துக்கு மூலகாரணமாக இருந்தவன் ,நான்; ஆனால் இன்றோ தமிழர் கூட்டணியினர் என்னை ஒதுக்குகிறார்களே" — என்று திரு. தேவநாயகம் ஒப்பாரி வைத்திருக்கிறார்.

திரு, தேவநாயகம், சில காலம் தமிழர் கூட்டணியோடு தன்னையும் இணைத்துக்கொண்டது உண்மை; ஆனால் பின்னர் அவராகவே கூட்டணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதும் உண்மை!

ஆம், தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து திரு. தேவநாயகம் தாமாகவே ஒதுங்கிக் கொண்டார்; கூட்டணியாக அவரை என்றும் ஒதுக்கியதில்லை!

கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ற நிலையில் திரு. தேவநாயகம் அவதிப்படுவது எமக்கு நன்றாகத் தெரியும் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு சேர்ந்ததாகக் காட்டிக்கொண்டால் மட்டுமே, தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெற முடியும் என்பதும் திரு. தேவநாயகத்துக்கு தெரியும்—அதே நேரத்தில், யூ. என். பியோடு கொண்டுள்ள உறவையும் அவர் முறித்துக் கொள்ளத்தயாராக இல்லை.

யூ. என். பியும் அக்கட்சியில் தொங்கும் திரு. தேவநாயகமும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை சாதாரண சிறுபான்மையினர் பிரச்சினையென்றே இன்னும் கணக்குப் போடுகின்றனர். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரையில் ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு சிறுபான்மைப் பிரச்சினையேயல்ல; தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையாக — தமிழ் ஈழத்துக்கும், சிங்கள நாட்டுக்குமுள்ள பிரச்சினையாகவே இன்றைக்கு இருக்கிறது. இந்த அடிப்படை வித்தியாசத்தை கொண்டுள்ள திரு. தேவநாயகம் யூ. என். பியிலிருந்து கொண்டு, கூட்டணியோடு எவ்வாறு உறவு பூண முடியும்?

யூ, என். பியிலிருந்து கொண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் எட்டிப்பார்க்கும் இரட்டை வாழ்க்கை நடத்த திரு. தேவநாயகம் ஆசைப்படுகிறார். ஆனால் அவரது அசைக்கு இணங்க தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு போதும் தயாராக இல்லை!

யூ. என், பி. 10 இலட்சம் மலையகத் தமிழர்களை அரசியல் அநாதைகளாக்கும் சட்டங்களை கொண்டு வந்த கட்சி; அம்பாறை மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும்,வவுனியா மாவட்டத்திலும் தனது ஆட்சிக்காலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை கச்சிதமாக நடத்தி முடித்து தமிழ் பிரதேசங்களை சூறையாடிய கட்சி; தனிச் சிங்களம் என்னும் கோஷத்தை இந்நாட்டில் முதன் முதலாக எழுப்பிய கட்சி; பௌத்தத்துக்கு இன்றைய அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள அந்தஸ்து போதாது—அதையும் விட மேலான அந்தஸ்து தரப்பட வேண்டுமென வாதாடிய கட்சி; பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நாசப்படுத்தியகட்சி,டட்லி; செல்வா ஒப்பந்தை அமுல் படுத்த மறுத்த கட்சி!

இதுமட்டுமல்ல—யூ. என். பியின் இன்றைய தலைவர், பண்டா—செல்வா ஒப்பந்தம் இன்று திரும்பி அமுலுக்கு வந்தாலும் கூட, அதை எதிர்த்து யாத்திரை நடத்துவேன் என்று யாழ்ப்பாணத்தில் பேசி பட்ட பாட்டை இந்த நாடு ஒரு போதும் மறக்காது.

இந்த இலட்சணத்தில்— தமிழ் விரோத — தமிழர் விரோத யூ. என். பி. யின் செல்லப் பிள்ளையாகவும் இருந்து கொண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியோடும் உறவு வைத்துக்கொள்ள திரு. தேவநாயகம் ஆசைப் பட்டால், அது நடக்கிற காரியமா?

தமிழர் விடுதலைக் கூட்டணி 'தனிநாடு' கோரிக்கையை காங்கேசன்துறை இடைத் தேர்தலின் போது திடீரென முன் வைத்ததாக கூறுகிறார் திரு. தேவநாயகம். ஆனால் காங்கேசன் துறை இடைத்தேர்தலின் முன்னர்—1974ம் ஆண்டு மத்தியில்—தமிழர் கூட்டணி

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையுமாறு மலையகத் தமிழருக்கு தங்கத்துரை அழைப்பு!

## யூலை மாநாட்டின் பின்னரே தொடர்ச்சியான போராட்டம்!

## நடவடிக்கைக்குழு கூடுகிறது!

ஏற்கெனவே வட்டுக் கோட்டை மாநாட்டில் தீர்மானித்தபடி திருகோணமலையில் யூலை 9, 10ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டையடுத்தே கூட்டணி தனது தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பிக்கும் என்று தெரியவருகிறது. 5—6—76 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படவிருக்கிறது.

மே 22 சட்டமறுப்பு இயக்கமும், அதைத் தொடர்ந்து எழுந்துள்ள அரசியல் நிலைமைகளும் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன. அத்துடன் திருகோணமலை மாநாட்டு ஏற்பாடுகள் பற்றியும் இங்கு விவாதிக்கப்படும்.

மலையகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகளை நிறுவுவது; பிரசாரம் செய்வது போன்ற திட்டங்களும் ஆராயப்படும். திரு. தொண்டமானின் பத்திரிகை அறிக்கையால் எழுந்துள்ள அரசியல் நிலைமைகளும் சீர்தூக்கிப் பார்க்கப்படும்.

தனிநபர் சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

"இந்த நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மலையகத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைய வேண்டும்; இன விடுதலைக்கு கூட்டணியுடன் சேர்ந்து உழைக்கவேண்டும்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம் நிறைவேறினால் மட்டுமே மலையகத் தமிழன் தலை நிமிர்த்த முடியும்"

—இவ்வாறு மஸ்கெலியா இ தொ. கழகப் பணிமனையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பகிய மேற்படி கழகத் தலைவரும், மூதூர் இரண்டாவது பா. உ. வுமான திரு. அ. தங்கத்துரை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"அண்மையில் வட்டுக் கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட அரசியல் பிரகடனம் நன்கு சிந்தித்து, அலசி ஆராய்ந்து அதன் பின்னரே எடுக்கப்பட்டது. இந்தப் பிர கடனமே ஈழத் தமிழினத்தின் ஒரே இலட்சியம். இந்த இலட்சியப் பிரகடனத்தை சில தொழிற் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம், ஆனால் அரசியல் ரீதியாக மலையகத் தமிழர்கள் விடுதலைக் கூட்டணியின் பின்னால் அணி திரளுவதை யாராலும் தடுத்து விட முடியாது. மலையகத்து தமிழ் இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்வதற்கு மிகுந்த ஆர்வமுடன் இருந்து வருவதை நான் அறிவேன். கூட்டணி அவர்களையும் அணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

"அடுத்த பொதுத் தேர்தலில், மஸ்கெலியா — நுவரெலியா தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நிச்சயமாகப் போட்டியிடும். மலையகத்தைச் சேர்ந்த ஒருவரே போட்டியிடுவார்."

இக் கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் மு. பரராஜசிங்கம் தலைமை வகித்தார். கழக துணைச் செயலாளர் திரு. சு. செகிகரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர்.

## 'சிறைத் தண்டனையா? சொத்து பறிமுதலா?

—1-ம் பக்கத் தொடர்

களும், கைகளில் உதயசூரியன்கொடிகளுமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் திரண்டு நின்றனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ரயில் நிற்கு முன்பே மக்கள் தலைவர்கள் இருக்கும் பெட்டிக்குள் பாய்ந்து அவர்களுக்கு முத்தமிட்டும், மாலை சூடியும், பழங்கள் வழங்கியும், வாழ்த்துமுழக்கமெழுப்பியும், தங்கள் அன்பைச் சொரிந்த காட்சி நெஞ்சை நெகிழ வைத்தது.

வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, பளை, பரந்தன், கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய புகையிரத நிலையங்களில் மக்கள் வரவேற்பு அளித்ததுமட்டுமன்றி புகையிரதத்திலேறி தலைவர்களுடன் தாமும் யாழ்நகர் நோக்கிவந்தனர்,

யாழ்நகர் புகையிரத நிலையம் உணர்ச்சிமிக்க மக்கள் வெள்ளத்தால் திரண்டு வழிந்தது காணுமிடமெங்கணும் நீக்கமற மக்கள் தலைகளே காணப்பட்டன. அவர்களது கைகளில் உதயசூரியன் கொடிகள்; 'சேட்'களில் உதயசூரியன் பாட்ஜுகள். மாதர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள், மாணவர்கள், அனைவரும் திரண்டிருந்தபோதிலும் — உணர்ச்சியின் உச்சக்கட்டத்துக்கு அவர்கள் சென்றுவிட்ட போதிலும் — கடைசிவரை கட்டுப்பாடு காத்து நின்றனர்.

ரெயில்வே நிலையத்திலிருந்து கூட்டணி அலுவலகம் வரை தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச்செல்ல மக்கள் ஆர்வம் காட்டின ராயினும், பொலிசார் ஊர்வலத்துக்கு அனுமதிக்காததால், தலைவர்களின் கட்டுப்பாட்டுக்கமைய மக்கள் அமைதி காத்தனர். சட்டத்தை மீறி ஊர்வலம் நடந்தால், பொது மக்களைத்தாக்கவும் அவர்களது எலும்புகளை முறிக்கவும் தயாராக குண்டாந்தடிகளும், துப்பாக்கிகளுமாய் பொலிசார் பெருந்தொகையினராக அங்கு காத்திருந்தனர்.

தலைவர்களைச் சுமந்துவந்த யாழ்தேவி, யாழ்ப்பாண ரயில் நிலையத்தை அடைந்ததும், எங்கும் ஒரே உணர்ச்சி மயம் — 'வாழ்க' எனும் எழுச்சி முழக்கம். புகையிரத நிலையம் எங்கும் தமிழர் விடுதலைக்கோஷங்கள் முட்டி மோதி எதிரொலித்தன; உதயசூரியன் கொடிகள் அசைந்தாடின; தலைவர்கள் நால்வரையும் உணர்ச்சி பொங்க கட்டியணைத்து தூக்கிவந்தனர் தமிழ் மக்களின் அன்புப் பிடியிலிருந்து தலைவர்கள் விடுபட பல மணித்துளிகள் பிடித்தன.

இதன் பின்னர் புகையிரத நிலையக்கட்டிடமேல் மாடிக்கு செல்லும் படிகளில் நின்ற வண்ணம் உணர்ச்சிப் பிழம்பாகக் காணப்பட்ட மக்கள் முன் தலைவர்கள் சுமார் 15 நிமிடநேரம் உரைநிகழ்த்தினர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இசைத்த தேசிய கீதம் புத்தெழுச்சியை யூட்டியது.

### அமிர் முழக்கம்

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் கூறியதாவது:-

"பத்து நாட்கள் சிறைவாசத்துக்குப் பின்னர், இங்கே திரும்பி வந்து, உங்களுடன் நிற்கின்ற இந்த நேரத்தில் சிறைச்சாலையிலே

—8-ம் பக்கம் பார்க்க

## தியாகி சிவகுமாரன் நினைவு நாள்

தமிழினத்தின் விடுதலைக்காக தன்னுயிர்ந்த சிங்கத் தமிழன்—நெஞ்சம் நிறைந்த தம்பி—தியாகி சிவகுமாரனுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் யூன் ஐந்து சனிக்கிழமையாகும்.

இதையொட்டி 5-6-76 சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு சிவகுமாரனின் பிறந்த ஊரான உரும்பராயில், அவ்வீரனின் நினைவாக அஞ்சலிக்கூட்டம் நடைபெறுகிறது: விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், தமிழ் இளைஞர் பேரவையினர், தமிழ் மகளிர் பேரவையினர் உரையாற்றினர். காலையில் சிவகுமாரனின் சமாதியிருக்கும் வேம்பன் மயானத்தில், சமாதிக்கு விசேட அஞ்சலி செலுத்தப்படுகிறது.

## தேவநாயகத்தின் ஒப்பாரி....

—4-ம் பக்கத் தொடர்

தனது ஆறு அம்சக் கோரிக்கையை கைவிடாத நேரத்தில் நடைபெற்ற மன்னார் இடைத்தேர்தலின் போது திரு. தேவநாயகம் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை தமிழ் மக்கள் மறந்து விடவில்லை

மன்னார் இடைத் தேர்தலில் தமிழர் கூட்டணி வேட்பாளருக்கு எதிராக யூ. என். பி. வேட்பாளரை ஆதரித்து திரு. தேவநாயகம் பிரசாரம் செய்ததை தமிழ் மக்கள் அதற்குள் மறந்துவிட்டதாக திரு. தேவநாயகம் தப்புக் கணக்குப் போடுகிறாரா?

மன்னார் இடைத்தேர்தலில் திரு. தேவநாயகம் தாம் ஓர் யூ. என். பி பக்தர் யூ என். பி. விசுவாசி என்பதை துலக்கமாக காட்டிக் கொண்டார்; தமிழர் கூட்டணியை எதிர்த்தார்; தமிழர் கூட்டணி 'தனிநாடு' இலட்சியத்தை ஏற்பதற்கு முன்னரேயே தமிழர் கூட்டணிக்கு விரோதமாக இவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் திரு. தேவநாயகம் தமிழர் கூட்டணியை விட்டு தாமாகவே ஒதுங்கிக் கொண்டுவிட்டார்.

தமிழர் கூட்டணியா—யூ. என். பியா என்ற கேள்விக்குப்பதில் சொல்ல வேண்டிய நிலைமை வந்த போது— திரு- தேவநாயகம் யூ. என். பியின் பக்கமே சாய்ந்து கொண்டார். யூ என். பியுடன் சங்கமமாகியவருக்கு தமிழர் கூட்டணியில் எப்படி இடம் கிடைக்க முடியும்?

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் தேசிய இனத்தின் அணியே தவிர — சிங்களக் கட்சிகளுக்கும், அதில் அங்கம் வகிப்பவர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இடம் கிடையாது. யூ. என். பியை தூக்கியெறிந்து விட்டு தமிழர் விடுதலையெனும் இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு நாளையே திரு. தேவநாயகம் வருவாரானால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கதவுகள் எப்போதும் அவருக்காக திறந்தேயிருக்கின்றன.

அடுத்த ... போது திரு. தேவநாயகத்துக்கு முக்கிய மந்திரி பதவி கிடைக்கும் என்று ஜனாப் மசூர் மௌலானா அண்மையில் கூறியிருந்ததைப் பார்க்கும் போது, திரு. தேவநாயகம் யூ. என். பியை விட்டு வெளியேறுமல் ஒட்டிக் கொண்டிருப்பதன் உண்மைக் காரணம் நமக்கு புரிகிறது.

அவர் யூ. என். பியுடனிருக்கட்டும் — நமக்கு அது பற்றிக் கவலையில்லை; ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி மீது அவர் வீண் பழி சுமத்தாமலிருக்கட்டும்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையா யூ. என். பியின் கொள்கையா தமிழ் மக்களுக்கு நன்மை தரும் என்பதை கல்குடாத் தொகுதி மக்கள் அடுத்த பொதுத் தேர்தலின் போது முடிவு செய்வார்கள்!

அதன் பின்னராவது யூ. என். பி. மயக்கம் திரு. தேவநாயகத்துக்கு தெரியுமானால் நாம் மகிழ்ச்சியடைவோம்!

## 'சியரட்ட' மீது பத்திரிகைப் பேரவை கண்டனம்!

யூ. என். பி. கட்சியின் சிங்களப் பத்திரிகையான 'சியரட்ட' மீது இலங்கைப் பத்திரிகைப் பேரவை அண்மையில் கண்டனம் தெரிவித்துள்ளது. தனி நபருக்குமான நட்டம் ஏற்படுத்துவதாகவும், அவரை ஏளனப் படுத்துவதாகவும் செய்தி எதையும் பத்திரிகை எழுத்தாளர்கள் பத்திரிகையில் பிரசுரிக்கலாகாது என 'சியரட்ட' பத்திரிகையில் பிரதம ஆசிரியருக்கு எதிரான ஒரு கட்டளையில் பத்திரிகைப் பேரவை கண்டித்துள்ளது.

சுதந்திரன் மீது தொடரப்பட்ட இரு வழக்குகளின் விசாரணை பத்திரிகைப் பேரவையில் முடிவடைந்துள்ளன. தீர்ப்பு வெளிவந்ததும், தீர்ப்பு விபரத்தையும், வழக்கு விசாரணை விபரங்களையும் சுதந்திரன் வாசகர்களுக்குத் தருகிறோம்.

வீட்டுத் தூய்மைக்கும், நுளம்பு, இலையான், தொல்லை நீங்கவும்;

நீம் சுகாதார தூபம் பாவியுங்கள்.

ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சபாநாயகருக்கு முன் கூட்டியே அறிவிக்காமல்

# தமிழரசுக் கட்சி பா. உ.க்களை கைதுசெய்தது

# பேரவையின் உரிமையைப் பறிக்கும் செயல்!"

## எதிர்க்கட்சி பிரங்கிகள் கண்டன முழக்கம்!

**சபாநாயகரின் முன் அனுமதியைப் பெருமல் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மூன்று தமிழரசுக் கட்சிப் பா.உ.க்களை கைதுசெய்ததின் மூலம் தேசிய அரசப் பேரவையின் உரிமையை அரசு மீறிவிட்டதாக 1-6-76ல் தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனா. உடுவில் பிரதிநிதி வி. தர்மலிங்கம் பேசும் போது ஒரே குற்றத்தைப் புரிந்த தமிழ் பா.உ.க்கள் அனைவரும் கைது செய்யப்படாமல், மூவர் மட்டும் கைதுசெய்யப்பட்டதேன்? என்று வினவினர்.**

சபையின் வழமையான நிகழ்ச்சிகள் முடிந்ததும் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்தின மூன்று எம். பிக்கள் — திருவாளர்கள் வி. என். நவரத்தினம், திரு. கே. துரைரத்தினம், பண்டிதர் க. பொ. இரத்தினம்— கைதானது பற்றி பிரதமர் தமக்கு அறிவித்த கடிதத்தைப் படித்தார்.

அக் கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாவது—

மே 24ல் கடிதம் எழுதப்பட்டிருந்தது. இதில் மூன்று எம். பிக்களும் கைது செய்யப்பட்டது அறிவிக்கப்பட்டது.

இதை மூன்று அங்கத்தவர்களும் அவசரகாலச் சட்ட விதிகளுக்கெதிராக துண்டுப் பிரசுரங்களை யாழ்ப்பாணத்தில் விநியோகித்தனர் இதனுல் இவர்களைப் பொலிசார் கைது செய்தனர். பின்னர் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டார்கள், கொழும்பிலுள்ள பஜட் ரேட்டிலுள்ள ஸி — 16ம் இலக்க வீட்டில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

திரு. ஜே. ஆர். ஜயவர்தன:—"இவர்களைத் தடுத்து வைத்தது ஒழுங்குப் பிரச்சினைக்கு உரியது. வழமையான சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்து காவலில் வைக்கப்பட்டால் இச்சபையில் நடக்கும் முக்கிய விவாதத்தில் கலந்து கொள்ள முடியாத நிலையிருக்கும். அரசியல் வேறுபாடுகள் இருந்தால் தீர்த்துக் கொள்ளலாம். ஆனுல் இப்படி அங்கத்தவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்குகொள்ளவிடாது இப்படி தடுத்து வைக்கப்படுவது சபையினுல் ஆராயப்படவேண்டும். இன்று இச் சபைக் கூட்டத்தில் அந்த அங்கத்தவர்கள் இல்லை. என்ன நடந்ததென்று தெரியவில்லை. இன்று அவர்கள் தாம் வசிக்கும் நாட்டில் தான் இருக்கிருர்களா என்பது கூடத் தெரியவில்லை,

சபாநாயகர்;— என்ன சொன்னீர்கள்?

திரு. ஜே. ஆர்:— தாம் வசிக்கும் நாட்டில்தான் இருக்கிருர்களாவென்று தான்!

டாக்டர் என். எம். பெரேரா:— இச்சபையின் எந்த அங்கத்தவரையும் சபாநாயகரின் உத்தரவின்றி கைது செய்யவோ தடுத்துவைக்கவோ, முடியாது. எம். பிக்களுக்கான பாதுகாப்பு எல்லா இடங்களிலும் நூற்றுண்டு காலமாகவே இருந்து வந்திருக்கின்றது. அதுவும் கிரிமினல் குற்றமென்றுல் நடவடிக்கை எடுக்கலாம். ஆனுல் இது அரசியல் சம்பந்தமானது.

சபாநாயகர்;— கிரியல்ல அங்கத்தவர் முன்னர் கைது செய்யப்பட்டபோது, அது பற்றி அறிவிக்கப்படுவதில் தாமதம் இருந்தது. அதை நான் ஆட்சேபித்தேன், பின்னர் பிரதமர் அந்தத் தவறை சரிசெய்து கொண்டார். கடிதமும் எழுதினர். கைது செய்வது பற்றி எனக்குத் தெரிவித்தேயாக வேண்டும்.

திரு. வி. தர்மலிங்கம்;— துண்டுப் பிரசுரங்கள் கொடுத்தவர்கள் எல்லோரும் எல்லா இடங்களிலும் கைது செய்யப்படவில்லை, மட்டக்களப்பு, மன்னர், திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் கொடுத்தார்கள். அங்கெல்லாம் எவரும் கைது செய்யப்படவில்லை. என்னைக் கூடக் கைதுசெய்யவில்லை. இப்படி எம். பி.க்களுக் கிடையிலும் வேறுபாடா? சட்டத்தைமீறுகிருேம் என்று கைது செய்வதானுல் எல்லோருமே கைது செயயப்பட்டிருக்க வேண்டும். இதிலும் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசு எம். பி.க்கள் என்ற வேறுபாடா? யாழ்ப்பாணத்தில் மட்டுமேன்? திருமலை, மட்டக்களப்பைப் பிரித்து வைத்து அதிலும் வேறுபாடா?

அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா — அவசரகாலச் சட்டத்தை மீறிய தனுல்தான் எம். பி.க்கள் கைது செய்யப்பட்டார்கள். பொலிசாரால் இக்குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டவர்கள் இப்போது விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். இதற்காக நீதிமன்றத்தில் வழக்கும்தொடரப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியினர் மீது வேறுபாடுகாட்டப்பட்டிருப்பதாக அங்கத்தவர் இங்கு கூறினர். அப்படி நாம் செய்திருந்தால் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் காணலாம்.

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா: எம். பி.க்களைக் கைது செய்வதும் நீதிமன்றத்தில் வழக்கு வைப்பதும் வேறு விஷயம் ஆனுல் சபாநாயகரான உங்களுக்கு அறிவிக்காமல் இச்சபையின் அங்கத்தவர் ஒருவரைக் கைது செய்வது சரியான ஒன்ரு என்பதுதான் இன்று தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் இதைத்தான் இன்று தீர்மானிக்கவேண்டும்.

சபாநாயகர்! சபாநாயகருக்கு அறிவிக்கப்படவேண்டும் என்பது கட்டாயம்.!

---

# இரத்தம் பொங்கிய ஜூன் ஐந்து!

—2-ம் பக்கத் தொடர்

தனி நாயகம் அடிகளார், முழந்தாளில்இருந்து எம்மை ஆசீர்வதிக்கிருர். ஆண்டவனை நோக்கிச் செபம் செய்கிருர், எமது அருகில் வருகிருர். ஆறுதல் வார்த்தைகள் கூறுகிருர். வருகின்றன கருங்கல்லுகள், அண்ணர் அமிர் மண்டை பிளந்தது. இரத்தம் பாய்கிறது.

இவ்வண்ணமிருக்கையில் மணி இரண்டு ஆகிறது; பாராளுமன்றம் ஆரம்பமாகப் போகின்றது பா. உறுப்பினர்கள் அங்கு சென்று பேசவேண்டும், போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம்.

அரசாங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பஸ்களில் இருப்பிடம் சென்ருேம். அன்றும் சிங்களக் காடையர் கூட்டம் அதிகம்;

இரும்பு மனிதன் நாகநாதனைக் காணவில்லை. விசாரித்தேன். காயப்பட்டவர்களை காரில் ஏற்றிக்கொண்டு மருத்துவ மனைக்குச்சென்றதாகவும், செல்லும் வழியில் காரை மறித்து காடையர்கள் அவரை அடிக்க, அவரும் பதில் அடிகொடுத்துவிட்டு மீண்டும் காரில் சென்றதாகவும் கூறினர்கள்.

மணி ஐந்து அடிக்கிறது. பொலிஸ் வான்கள் வருகின்றன, எங்கள் எல்லோரையும் ஏற்றுகிருர்கள். வான்கள், கோட்டை பொலிஸ் நிலையத்தில் வந்து நின்றன. அங்கே எங்கள் பெயர்களைப் பதிவு செய்தார்கள். மீண்டும் வான்களில் ஏறினேம். வான்கள். கோட்டை புகையிரத நிலையத்தில் வந்து நின்றன. கோட்டை புகையிரத நிலையம் வெட்டைவெளியாக வெறிச்சோடிக்கிடக்கின்றது. எங்கு பார்க்கினும், எங்கும் நோக்கினும் இராணுவவீரர்கள்.

### ● 20 வருடங்களின் பின்னர்...!

கொழும்பு வாழ் இந்தியத் தமிழரும்—இலங்கை தமிழரும், அரசாங்கத்திடமிருந்து உத்தரவுபெற்று சாப்பாட்டுப் பாசல்களை நமக்குத் தந்தார்கள் — மட்டக்களப்புத் தொண்டர்கள் மட்டக்களப்புக்கும் — திருமலைத்தொண்டர்கள் — திருமலைக்கும் — நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தோம்.

ஈழத்தமிழகம் எங்கும் பூரண ஹர்த்தால் —துக்கம் அனுட்டிப்பு; இதே நேரத்தில பாராளுமன்றத்தில்—நாட்டை இரண்டு கூருக்கப் போவதாகவும், தமிழர் தமிழ் நாடுகோரும் காலம் அதிதூரத்தில் இல்லை எனவும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும், டாக்டர் என். எம். பெரராவும் கூறினர்கள்.

அவர்கள் கூறி 20 வருடங்கள் மட்டும், இணைந்து வாழப்பார்த்தோம்—முடியவில்லை. பிரிந்து வாழ, தனித் தமிழ் நாடுகோர தமிழர் விடுதலை கூட்டணியின் முதலாவதுதேசிய மாநாடு, வட்டுக்கோட்டையில் தீர்மானித்துவிட்டது.

---

## நீ தொட்டபணி முடிப்போம்!

அன்னை தமிழின்
இன்னல் துடைத்திட—
வாழ்ந்த தமிழினம்
தாழ்வகற்றி வாழ்ந்திட—
நீதியைக் கொன்று
நீசர் விளைக்கின்ற
மறம் கடிந்து; நல்
அறம் வளர்த்திட—
தன்னலம் கருதாது
தன்னுயிர் போற்ருது
புயலெனச் சீறியே
செயற்கரியன செய்து
உயிரைத் தமிழுக்கும்
உடலை மண்ணுக்கும்
உவந் தளித்தான்; எம்
பொன் சிவகுமாரன்!
எங்கள் நெஞ்சத்தில்
நீங்கா துறைகின்ற
சிங்கத் தமிழ் மகன்
சிவகுமாரன்; நன்கு
எண்ணித் துணிந்தும்
நிறைவுறுப் பணியை
நிறைவுறச் செய்வோம்!!

— சரவணை முருகன்

---

## அண்ணு சிவகுமாரா!!

"அண்ணு! சிவகுமாரா!!
அரிய தியாகச் செல்வா!!!
ஈழத்தில் நீ மறைந்து
ஈராண்டு முடிந்ததுவே,
நீளுலகில் தமிழொலிக்க
நீ தொட்ட பணிமுடிப்போம்;
சிந்தை யெல்லாம்
நிறைந்தவனே
சாந்தி கொள் சிவகுமாரா.

—பீ. இரிஜா,
கல்லடி,
மட்டுநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையா துவேஷமா?

இத்தலைப்புக்கும் எக்கட்சிக்கும் எத்தொடர்புமில்லை. இப்படியொரு வரியை எழுத வேண்டிய கட்டாயத்தில் இன்று நாம் வாழுகின்றோம்...

கிறித்தவ உலகம், [மக்கள்] தொடர்பு சாதனங்களுக்கென்று இத்தினத்தை (30-5-76) ஏற்படுத்தியுள்ளது. இத்தினத்துக்கு அனைத்துலகிற்கும் ஆளும் சின்னப்ப பாப்பரசர் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். அச்செய்தியின் தலைப்பே—

மக்கள் தொடர்பு சாதனங்களும்— மனித அடிப்படை உரிமைகளும் கடமைகளும்.

மக்கள் தொடர்பு சாதனங்களாக இன்று கருதப்படுபவை — பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவையே. இச்சாதனங்கள் மக்கள் உரிமைகளை எடுத்துரைத்து, மக்கள் நிறைவுடன் வாழ வழிவகுத்து அவ்வுரிமைகளைக் காப்பாற்றி வளர்க்கக் கடமைகொண்டவை. ஆகவே இத்துறையில் பணிபுரிவோரின் பொறுப்பு புனிதத்துவம் வாய்ந்தது.

அவர்கள் சொல்லும் செய்தி. எழுதும் கட்டுரை, கவிதை, கதை அனைத்துமே மக்கள் நலன் கருதி, அவர்களின் உரிமைகளைப்பாதிக்காமல் காப்பாற்றவேண்டும். ஆகவே தொடர்பாளர்கள் (Communicators) பணத்துக்காகவோ இழிவான செல்வாக்கை (Cheap popularity) நாடியோ, பதவிகளைத் தேடியோ, செய்திகளை, கதைகளை, நிகழ்ச்சிகளை அரைகுறையாகவும் சொல்லக்கூடாது: திரித்தும் கூறக்கூடாது இது சமூகத்துக்கு எதிராகச்செய்யும் பெருங்குற்றமாகும் என்றார் பாப்பரசர்.

ஏனெனில், செய்திகளை, உண்மைகளை, சரியாகவும், முழுமையாகவும் அறிந்து கொள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு.

அது மட்டுமல்ல அவனது உரிமை.

வாழ்வதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு. ஆனால், அவ்வாழ்க்கையை எப்படியும் வாழலாம், அடிமையாகவும் வாழலாம், மானங்கெட்டும் வாழலாம் என்பதல்ல. அவ்வாழ்க்கையை அவன் மனித அடிப்படை உரிமைளோடு வாழ அவனுக்கு உரிமை உண்டு.

அவன் விரும்பிய கல்வியை விரும்பியமொழியிற் கற்பதற்கும், விருப்பிய தொழில்துறையில் ஈடுபட்டு வேலை செய்வதற்கும் அவனுக்கு உரிமை உண்டு.

பிறப்பதற்கும், பொறுப்பான பெற்றோர்களாக வாழ்வதற்கும் மனிதனுக்கு உரிமை உண்டு.

சமாதானத்துடன் வாழ, சுதந்திரத்துடன் வாழ, சமூக நீதியை நிறுவி வாழ அவனுக்கு உரிமை உண்டு.

ஒரு தனிமனிதனையோ அன்றேல் அவன் வாழும் சமூகத்தையோ பாதிக்கும் எந்த முடிவிலும் பங்கு

**கரவையூர் செல்வம்**

கொள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு.

ஒரு மறையில் நம்பிக்கை வைத்து அம்மறையை வழிபடவும், அம்மறையினரோடு சேர்ந்து வழிபடவும் அவனுக்கு உரிமை உண்டு.

இதிலிருந்து புலனாகும் உண்மை என்ன? ஒரு மொழியைப்பேசுவதனால், அன்றேல் ஒரு மதத்தை வழிபடுவதனால் ஒரு மனிதன் சமூகத்தில் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. அப்படி அவன் பாதிக்கப்படுவானானால் அவனது உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை.

இவ்வுரிமைகளை வலியுறுத்தி, இவற்றை மக்கள் நலன் கருதிக் காப்பாற்றப் பத்திரிகை, வானொலி தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற பெரிய சமூகத்தொடர்புக் கருவிகளுக்கு பெரிய பொறுப்பு உண்டு.

உரிமைகளை விரித்துரைத்த பாப்பரசர் அவ்வுரிமைகளில் இருந்து உதிக்கும் கடமைகளை வலியுறுத்தத் தவறவில்லை. உரிமைகளும் கடமைகளும் தோளோடுதோள் நின்று செல்லவேண்டும்.

உரிமைகளைக் கொடாது கடமைகளைச்செய்யுமாறு வலியுறுத்துவது எவ்வளவு தவறோ. அதேபோன்று கடமைகளைச்செய்யாது உரிமைகளைக்கேட்பதும் தவறு.

உரிமைகேட்பவனைத் துவேஷம் பிடித்தவன் என்று ஒதுக்கி விடுவது சமூகத் துரோகமாகும். மனித உரிமைகளைப்பறிப்பதுமாகும். உரிமை வேறு. துவேஷம் வேறு.

உரிமைகளும், கடமைகளும் ஒன்றாக வலியுறுத்தப்பட்டாலேயே சமத்துவமான, சுதந்திரமான, சகோதரத்துவ சமுதாயமொன்று உருவாகும். அங்குதான் பொருளாதார முன்னேற்றத்தையும் காணலாம்: நாட்டின் ஒற்றுமையையும் காணலாம். ஏற்றத்தாழ்வற்ற, இன்று எல்லோர் வாயிலும் இலகுவாக வந்துவிடும் 'சோஷலிச' சமுதாயம் மலரும். இவ்விலட்சியத்திற்காகவே எழுத்தாளர்கள், ஒலிபரப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் தன்னலங் கருதாது உழைக்க வேண்டும். இதுவே இந்நாளில் எமது வேண்டுதல்; இதற்கே எமது வாழ்த்துக்கள்.

---

# 'இந்தியா செல்வதற்கு ஏன் இந்தத்தடை?'

பாரத நாடு பழம் பெருமை மிக்க நாடு. தமிழ் இனம் முதல் முதல் தோன்றியதும், செங்கோலோச்சிய நாடும் அதுவே. காசி, ஹரித்துவார், குருசேத்திரம், ரிஷிகேசம், துவாரகை, பிருந்தாவனம், சிதம்பரம், திருச்செந்தூர், திருப்பதி, ஸ்ரீரங்கம், சீர்காழி, மதுரை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, முதலிய வரலாற்றுப் புகழ் பெற்ற தலங்களைக் கொண்ட புண்ணியதேசம். இந்த தலங்களை தரிசிப்பதற்கென்றே அநாதிகாலம் தொடக்கம், இந்த நாள் வரை நம் ஈழ நாட்டில் இருந்து ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சென்று கொண்டே இருக்கின்றார்கள். பிதிர்கடன், நேர்த்திக்கடன், செய்வதற்கென்றே அதிகமானோர் செல்கின்றார்கள். தமிழ் மக்களில் சாதாரண ஏழை தொடக்கம் பெரும் பணக்காரர் வரை புண்ணிய பாரதத்தை தரிசிக்கவே முயல்வர்.

—இந்திய யாத்திரை செய்பவர்கள் அதிகமானோர் தமிழர் என்பது அரசினருக்கு தெரிந்த விடயம். தமிழன் இந்தியா செல்கின்றான் என்ற நோக்கில் இந்த அரசாங்கம் செய்யும் கொடுமைகள் ஏராளம். வெளிநாட்டுச் செலாவணி இல்லை. அப்படியென்றால் அங்கு செல்பவர்கள் பிச்சை எடுத்துத் திரிவதா? அத்துடன் பாஸ்போட், எக்ஸிட்பேமிற், எடுப்பதற்கு, காலதாமதம். அப்படி எடுத்தும் 'ஆகாய விமானத்தில்' மட்டுந்தான் செல்ல வேண்டுமாம். விமானக்கட்டணமோ சாதாரணமாக 40 ரூபாவாக இருந்தது. ஆனால் இப்பொழுது கொழும்பில் இருந்து திருச்சி. செல்ல இத்தொகை எட்டு மடங்காக தேவைப்படுகின்றது. பலாலி இருந்து திருச்சி செல்ல ரூபா 200, தேவைப்படுகின்றது. கொழும்பில் இருந்து திருச்சி செல்ல சுமார் $1\frac{1}{4}$ மணித்தியாலமும், பலாலி இருந்து திருச்சி செல்ல சுமார் 45 நிமிடமும் தேவை படுகின்றது. ஆனால் கட்டணமோ உள்நாட்டில் நடத்தும் சேவையை விட பல மடங்கு கூடுதலானது.

—அரசாங்கத்தில் இன்னும் ஒரு சட்டமும் உள்ளது இந்தியாவிற்குச் சென்று திரும்பி இலங்கைக்கு வராதவர்களுக்கு, மட்டுந்தான் தலைமன்னாரில் இருந்து, இராமேஸ்வரம் செல்ல அனுமதியுண்டாம். மற்றையோர்களுக்கு அனுமதி இல்லையாம். ஆனால் ஆகாய விமானத்தில் இந்தியா சென்று, திரும்பி வரும் போது மட்டுந்தான் இராமேஸ்வரம் இருந்து தலைமன்னார் வர அனுமதிப்பார்களாம்; என்ன சட்டம் இது? நீராவிக் கட்டணமோ மிகவும் குறைவான தாகும் சாதாரணமாக [illegible] போய்வர 80 ரூபாய்க்குள் அடங்கும்) ஆனால் விமானக் கட்டணம்நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால் சாதாரண ஏழைகூட தென்னாட்டு தலங்களைத் தரிசிக்க முடியாமல் இருக்கின்றான்.

—இலங்கையருக்கு—குறிப்பாக தமிழருக்கு நீராவிக்கப்பலில் சென்று வர ஏன் அனுமதியில்லை? இதனை ஒவ்வொரு தமிழனும் அறிய முயல வேண்டும். வெளிநாட்டு செலவாணி, அனுமதி இல்லாத காரணத்தினால் தான் தவறான வேலையான கடத்தலை, ஒரு சாதாரண பொது மகன் செய்கின்றான். இதனை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

—யாழ்ப்பாணம் இருந்து கச்சதீவு செல்ல சுமார் 40 மைல். 40 மைல் தொலைவில் உள்ள இத்தீவிற்கு இயந்திரப்படகுளில் ஆட்களை ஏற்றி ஓடவிட்டுள்ள இவ்வரசாங்கம், 20 மைல் தொலைவில் உள்ள தென்னிந்தியாவிற்கு (பாஸ்போட் விசா அனுமதியுடன்) ஆட்களை ஏற்றிச் — செல்ல— இயந்திரப்படகுகட்கு அனுமதி கொடுத்தால், கட்டணக் கூலியும் குறைவதுடன், கப்பலில்லா குறையையும், ஓரளவு தீர்க்க முடியும் என்றும் நீராவிப்படகில் கடலில் மீன்பிடிக்கும் ஒரு [illegible]

—'தமிழ்முனி'

---

# சங்கப் பலகை

## அறுவடை

தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். அவன் வாழும்போது விதைத்தவை. வளர்த்தவைதான் மரணம் எனும் அறுவடையில் அவன் கொள்ளும் பயன். இக்கருத்தையே நூலாசிரியர் அமுதன் அறுவடை நாடகத்தின் மூலம் விளக்கி நிற்கின்றார்.

கலையின் பேரால் சுற்பைவிலை கூறும் கலாரசிகன், அதிகாரத்தை அந்த வழியில் கையாளுபவர்கள்— போலிகள் — கடமையில் தவறிய ஆசிரியர்கள்—கறுப்புச் சந்தைகாரர் — கலப்படப் புலிகள்—கடவுளுக்கே கைலஞ்சம் கொடுக்கும் காதகர்கள் இத்தகைய புல்லுருவிகளை புடைத்துத் துலக்குகிறார்.

சமுதாயத்தில் மலிந்துள்ள நோய்களையும், அதற்கு வேண்டிய மருந்து. அந்நோய்வராமலே தடுக்கும் நாசினி வள்ளுவம் தான் என்று சாதிப்பதில்— குறள் வழி வாழ்பவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பத்திற்கு குறைவில்லை—

மேற்கோள் காட்டுவதற்காக மட்டுமல்ல. வாழ்வதற்காகவே குறள் எனும் தத்துவத்தை நிலைநாட்டுவதில் ஆசிரியர் அமுதன் வெற்றி கொண்டுள்ளார்.

இந்நூல், வாசகர்கள் மதியிலும், நாடகத் துறையிலும் புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும், ஏற்படுத்தும்.

அழகிய அடக்கமான அறிவு பொதிந்த இப்படைப்பை நூலுருவாக்கிய 'வேல்' வெளியீட்டகத்தார் இது போன்ற பல பயனுள்ள நூல்கள் வெளிவர பணியாற்றுதல் அவர்களின் தலையாய கடமையாகும்.

புத்தகம் ஒன்றின் விலை ரூபா 2/75.

---

● சாவகச்சேரியில்

# தந்தை செல்வாவின் பிறந்த நாள் விழா!

தமிழ் ஈழத்தந்தை மூதறிஞர் செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் பெருவிழா சாவகச்சேரி தமிழ் இளைஞர் பேரவையினரால் 6-6-76 ஞாயிற்றுக்கிழமை (இன்று) கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு சமூகஜோதி சி. க. மயில்வாகனம் தலைமை தாங்குகிறார். சட்டத்தரணி நா. அருணாசலம் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

பத்துநாட்கள் தடுப்புக் காவலிலிருந்து விடுதலையான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாவலர் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துகிறார்கள்;

இவர்களைத் தவிர இன்னும் பல தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் பா. உ.க்களும் உரையாற்றுகிறார்கள். விழாவில் தந்தை செல்வாவும் கலந்துகொள்ளுகிறார். க. பு. கணபதிப்பிள்ளை நன்றியுரை நவில்வார். விழா அழைப்பாளர் இ. யோகானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# "சிறைத் தண்டனையா? சொத்து பறிமுதலா?

—5-ம் பக்கத் தொடர்

ஆண்டுக்கணக்காக வாடி வரும் ஐம்பதுக்கு மேற்பட்ட என் அருமைத் தம்பிமார்களை எண்ணிப்பார்க்கிறேன். இளைஞர்களை கைது செய்யும் அரசாங்கம் முடிந்தால் எம்மையும் கைதுசெய்யட்டும் என்று ஆட்சியாளருக்கு சவால் விட்டோம்; சிறைப்படுத்தப் பட்டோம். பத்துநாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோம்; இது நாம் செல்லும் நீண்ட விடுதலைப்பயணத்தில் ஒரு மைல்கல்லாகும்.

"மே 22ம் திகதி நடவடிக்கையிலீடுபட்ட பலர் கைது செய்யப்படவில்லை; அவர்கள் களத்திலிருந்து ஓடிப்போகாமல் மீண்டும் சட்ட மறுப்பிலீடுபட்டார்கள். அவர்கள் மீது ஆட்சியாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் துணியவில்லை.

சென்ற 24ம் திகதி நடைபெற்ற ஹர்த்தாலன்று—பல வாலிபர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகவும், வெறித்தனமாகத் தாக்கப்பட்டதாகவும் அறிந்து சிறையிலிருந்தவாறே வேதனைப்பட்டேன். சிறையை நிரப்ப வாலிபர்கள் போட்டிபோட்டு முன்வந்து கொண்டிருக்கிறார்கள்.

"நமது அடுத்த நடவடிக்கை பற்றி திட்டவட்டமான முடிவை விரைவில் அறிவிப்போம். அந்த முடிவை கட்டுப்பாட்டுடன் செயற்படுத்துவோம். உணர்ச்சிவசப்பட்டு, கட்டுப்பாட்டை இழந்தால் நமது இலட்சியத்தை சென்றடைய முடியாது! இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்!"

## நவம்பேச்சு

திரு. வி. என். நவரத்தினம் பா. உ. பேசுகையில் கூறியதவாது:-

"நமது இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு நாம் எடுத்துள்ள முயற்சியில் கஷ்டங்கள் குறுக்கிடலாம்; இன்னல்கள் எழலாம். அவற்றைக் கண்டு மனம் தளரக் கூடாது.

நாம் நடத்துவது தமிழ் மக்கள் இயக்கமல்லவென்றும், தமிழரசுக் கட்சியின் இயக்கமே யென்றும் பிரதமர் கூறியுமிருந்தார். தமிழ் காங்கிரஸ் தலைவர்கள்இரண்டாவது முறையும் சட்ட மறுப்பு நடவடிக்கையிலிறங்கியதன். மூலம் பிரதமருக்குப் பதிலளித்துவிட்டனர். இலட்சியத்தால் இணைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை யாராலும் பிரித்துவிடமுடியாது.

நாம் சிந்தித்து திட்டமிட்டே ஒவ்வொரு போராட்டத்தையும் நடத்துவோம், வாலிபர்கள் உணர்ச்சிவசப்பட்டு அவசரப்பட்டு கட்டுப்பாட்டை மீறும்செயலில் ஈடுபடக்கூடாது. பதறுத காரியம் சிதறுது என்பதை நமது தம்பிமார்கள் உணரவேண்டும்."

## பண்டிதர் உரை

பண்டிதர் இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"எங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண நாமே தயாராகி விட்டோம். இதை வலியுறுத்துவதே வட்டுக்கோட்டைத் தீர்மானம்.

"தியாகத்தின் மூலமே எமது விடுதலையைப்பெற முடியும். தமிழ் மக்கள் தங்கள் விடிவுக்கு எத்தகைய தியாகத்தையும் செய்யத்யாராகிவிட்டனர்! எம்மைக் கைதுசெய்ததன் மூலம், எமது இயக்கம் மேலும் வலுப்பெற்றுவிட்டது!"

## துரைபேச்சு

பருத்தித்துறை பா. உ., திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

ஆளுங்கட்சியிடம் அண்டிப் பிழைப்பதால் தமிழினத்துக்கு எந்தவித விமோசனமும் கிடைக்கப்போவதில்லையென்பதை அனுபவரீதியாக உணர்ந்து அதிலிருந்து பலர் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. நடராசாவும், இப்போதுதான் இதை உணர்ந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முழுக்குப்போட்டுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே தமிழன் இருக்கவேண்டிய இயக்கம்.

"எம். பி.க்கள் என்ற காரணத்தில் எம்மை பத்து நாட்களில் வெளியேவிட்டார்கள்; எய்தவர்கள் நாமிருக்க அம்பைநோவது போல—எம்மை வெளியே விட்டு விட்டு, இளைஞர்களை எதற்காக சிறையில் இன்னும் அடைத்து வைத்திருக்கிறார்கள். என்று கேட்க விரும்புகிறேன். இயக்கரீதியான நமது போராட்டம் இன விடுதலை காணுமட்டும் தொடர்ந்து நடந்தே தீரும்!"


5-வது வெற்றி வாரம்!

செல்லமகால்

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி, ஸ்ரீபிரியா, தேவகி மற்றும் பலர் நடித்தது

ஜனாதிபதி விருது பெற்ற

'அவள் ஒரு தொடர் கதை'

திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.S.c.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

இப்பொழுது

கெபிட்டி

றீகல் (மட்டுநகர்)

ஜெயசுதா - ஜெயசங்கர்,

தங்கவேலு - மனோரமா

- நடித்த -

பந்தாட்டம்

5வது வெற்றி வாரம்

கெப்பிட்டல்—பிளாசா

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய், நடித்த—

கௌரவம்

(ஈஸ்ட்மென் கலர்)

லிடோ (யாழ் நகர்) 4-வது வெற்றி வாரம்

சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன் —நடித்த

அன்பைத்தேடி

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் 6 வது வாரம் —யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன், டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

அகத்தியர்

(கலர்)

கிங்ஸ்லி சிவாஜி-சரோஜாதேவி

நடித்த — ஆலயமணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் அதாபனத்தினரால் கொழும்பு - 13 பண்டாரநாயக்க வீதி ,194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூன் மாதம் 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.